*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 O Published Every Friday

Vol. 140 JAFFNA, FRIDAY, 4TH APRIL, 1980 No. 14

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 30/- per year.
Foreign Air Mail:
Rs. 90/- per year.

*Apply to:*
**The Manager,**
'Morning Star',
VADDUKODDAI.

## Farewell to Dr. & Mrs. Holmes

The Staff of Jaffna College accorded a farewell to Dr. and Mrs. Holmes who are leaving the Island to continue their services in the United States. At the farewell lunch on Wednesday, the 3rd of April, the Principal Mr. A. Kadirgamar spoke of the great affection which the Holmes family had for the Jaffna man. He also said that within one year they have won the admiration and love of the entire school community. Dr. Holmes in his reply urged the teachers of Jaffna College to work harder and said that there is only one way for excellence and that is labour.

## Reception to New Deacon

The members of the Atchuvely Church held a reception on Sunday, the 23rd March to felicitate their Worker, Rev. A. V. Jesuthasan on his Ordination as a Deacon. The function was held immediately after the morning service and was presided over by the Rev. D. C. Ratnasingham, the Circuit Pastor.

The Women's Guild of the Church served refreshments to those assembled. Tributes were paid regarding the good qualities and the various abilities and activities of the new Deacon by Messrs. A. Karthigesu and P. J. Thambiratnam. The latter also gave a brief sketch of Rev. Jesuthasan's life and career and stated how he was converted to the Christian Faith at the age of twenty while at Navajeevanam.

The Secretary of the Church, Mr. S. V. Velupillai, thanked all those who helped to organise the function and those who were assembled. The Rev. A. V. Jesuthasan, in his reply, stated how he was indebted to the late Edward Navaratnasingham, Principal, Delft Junior School, and to the Rev. A. C. Thambirajah of Navajeevanam. The function came to a close with benediction pronounced by the Rev. D. C. Ratnasingham.

## The Hardy Institute at Amparai

The Mahaveli Project will spend half a million rupees for a special program to train technical officers at the Hardy Institute. The Ministry of Higher Education will be in charge of this programme. Mr. L. H. Sumanadasa has already been appointed Principal of the Institute. Staff and lecturers will be appointed on a contract basis.

There has been in recent years a vast drain of technical officers to the gulf states because of the attractive emoluments offered.

## Plan to Improve Pond near Jaffna Clock Tower

At a Conference of the Government Agent Mr. Yogendra Duraisamy, the Mayor Mr. R. Visvanathan, four MMCs, the Deputy Commissioner of Planning, Technical Advisor to the District Ministry, the Irrigation Engineer and others, held in the Jaffna Secretariat recently, it was decided to renovate the pond beside the Clock Tower at a cost of eight lakhs rupees — three lakhs of it to be given by the District Ministry and five lakhs by the Municipality. With the co-operation and advice of the Irrigation Board, the Reclamation Board and the Highways Department, the entire pond will be cleaned, a canal built on the Regal Theatre side, valves constructed for the exit of water, an artificial island constructed at the centre of the pond and a statue of *Tiruvalluvar* placed in a Mandapam on the island, and a ten-foot path with decorative electric lamps built all round the pond. The face of the town is expected to receive added beauty and more tourists attracted to Jaffna, as a result of this project.

## Additional Train and Private Bus Services to Jaffna

The Ceylon Government Railway has added a second night train service between Kankesanturai and Colombo from 24th March, 1980. The trains leaves Kankesanturai at 8-45 p. m. and Colombo Fort at 9 p. m. They are scheduled to reach their destinations at 6 a. m.

Luxury Buses have started operating between Colombo and Jaffna, the fare being Rs. 45/- by day bus and Rs. 50/- by night.

## A Home for the Disabled in Kilner Hall

A major part of the Kilner Hall on K. K. S. Road, near Jaffna Hindu College and belonging to the Sri Lanka Methodist Church has been renovated at a cost of Rs. 40,000/- as a home for the disabled to be run by the Lions Club of Jaffna. At the inauguration ceremony which took place on Saturday, the 15th March, 1980, the President of the Methodist Church, the Rev. P. B. Rajasingam and the District Governor of the Lions Club, Dr. W. A. Ferdinand participated among several others. Lion Dr. S. Sabaratnam presided. Before the Opening Ceremony they unveiled the portrait of the late Mr. M. Thaninayagam of Velanai (formerly of Navajeevanam), a paralysed educated youth who first proposed such a rehabilitation programme for the disabled of Jaffna.

## Professor C. R. Boxer at the University of Jaffna

C. Ralph Boxer, Professor Emeritus, Department of History, University of London, addressed the Seminar on *"Indigenous Rulers and Western Intruders"* at the University of Jaffna on Saturday, the 22nd of March. The Seminar was conducted by the Association of South Asian Studies of the University of Jaffna.

An interesting discussion followed Peofessor Boxer's lecture at which Dr. Tikiri Abeyasinghe and other leading historians of Sri Lanka participated. The Seminar was presided over by Mr. Seelan Kadirgamar, Lecturer in History at the University.

## Department of Christian Civilization

Another branch of studies has begun at the University of Jaffna with the inauguration of the Department of Christian Civilization. Now students of this University can read Christian Civilization as one of their subjects for a Degree in Arts. Lectures on Christian Civilization are now given by Mr. S. Jebanesan of Jaffna College.

## Service of Thanksgiving

A Service of Thanksgiving for the life of Mrs. Leela Paul was held at the Cathedral Church of Vaddukoddai on the 22nd of March. Mrs. Paul had always considered the Vaddukoddai Church as her home Church. The Service was conducted by the Rev. S. N. Sugunananthan, at which the Rev. D. R. Ampalavanar, who had known Col. Paul's family at the Annamalai University, spoke. The Litany was led by the Rev. V. S. D. Satthianadhan, and the Rt. Rev. D. J. Ambalavanar pronounced the Benediction. The Choir rendered Tennyson's *Crossing the Bar* which ends with the triumphant note,

"I hope to see my Pilot face
to face,
When I have Crossed the Bar."

The soul of the departed must have joined in the closing hymn:

"Earthly work is done
Earthly sounds are none;
Rest in sleep and silence seeking
Let me hear Thee softly speaking
In my spirit's ear
Whisper "I am near...
That THY watch will keep
Saviour O'er my sleep."

— Cor.

## National Youth Service Council Projects at Kaithady

The Government Agent and Secretary to the District Ministry of Jaffna, Mr. Yogendra Duraisamy inaugurated on 19th March, 1980, a project sponsored by the National Youth Service Council to employ twenty youth for six months to cultivate Ipil Ipil trees in two acres of the land belonging to the State Home for the Aged, Kaithadi. As a result of this project, the Home for the Aged is expecting to realise its entire need of fuel from the Ipil Ipil trees planted. Also the leaves of the trees will be used to feed cattle and poultry.

Another twenty youth will be employed for six months to plant mulberry and other fruit trees in 10 acres belonging to the Home for the Aged.

## Peradeniya Hindu Temple Renovated

The Hindu Temple in the Campus of the University of Peradeniya built twelve years ago was damaged during the 1977 Race Riots. It was renovated last year and the Kumbapishekam ceremony held in February, 1980. The Hindu Students' Union has published a colourful souvenir இந்து தருமம் of over 150 pages to mark the ceremony.

## Dates For Your Diary

**April, 1980**

| | |
|---|---|
| 3 Thur. | Maundy Thursday |
| 4 Fri. | Good Friday |
| 6 Sun. | Easter |
| 12 Sat. | Day before New Year — Holiday |
| 13 Sun. | Next after Easter |
| 14 Mon. — 25 Fri. | CISRS Continuing Theological Education |
| 20 Sun. | Second after Easter |
| 26 Fri. | Mark the Evangelist |
| 25 Fri. — 29 Tue. | JDCSI Youth Camp |
| 27 Sun. | Third after Easter |
| 29 Tue. | Full Moon — Holiday |

## A Change in the Polls System

President J. R. Jeyawardene has announced at a public meeting recently that the Present Polls System may give place to a better system which would ensure more effective development in the country.

Under the proposed system, there would be a district in place of an electorate. The voters in the district will have two votes, one for the party and one for the individual.

# உதயதாரகை

## UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"


### தாரகை ஒளி

குறிப்பிட்ட ஒரு சட்டத்தை மீறுதல் ஒரு செயலைப் பாவமாக்கவில்லை. அந்தச் செயல் மனிதன் கடவுளிடமிருந்தும், பிறமனிதனிடமிருந்தும், தன்னிடமிருந்தும் வேறுபட்டு நிற்கும் தன்மையை வெளிப்படுத்துவதால்தான் அது பாவமாகின்றது.

— *Paul Tillich*


மலர் 140 ] 4 — 4 — 1980 [ இதழ் 14


## உயிர்த்தெழுந்த கிறிஸ்து

பெரிய வெள்ளியன்று இயேசுவின் சீடர்களும் அன்பர்களும் ஒரு பயங்கரக் காட்சியைக் கண்டனர் பயமும் திகிலும் அவர்களை மேற்கொண்டன. அவர்கள் சிதறுண்டு ஓடினர். இந்தப் பயங்கர சம்பவம் நடப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான் பேதுரு நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கை செய்தான். பவனியின் போது ஓசன்னா என்று எல்லோரும் ஆர்ப்பரித்தனர், சீடர்கள் பெருமிதமடைந்தனர்.

ஆனால் அதற்குப் பிறகு நடந்ததென்ன? பவனியின் ஆரவாரம் கெத்சமனேயின் வியாகுலமாக மாறியது இயேசு சிலுவையிலே அறையட்பட்டு கொல்லப்பட்டார்.

சீடர்கள் மிகவும் பயந்தனர். பேதுரு மூன்று முறை மறுதலித்தான். சீடர்கள் தமது இரட்சகரும், மன்னரும் போய்விட்டார் என்று கதிகலங்கி நின்றனர். எங்கும் சோகமும் நம்பிக்கை வரட்சியும் காணப்பட்டன.

ஆனால் இயேசுக்கிறிஸ்து மரிக்க வேண்டியிருந்தது. ஏசாயா 53 : 9 ல் இது திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. இரண்டாம் நாளிலோ சீடர்கள் மறந்து போய்விட்டதை இயேசுவில் பொறாமை கொண்டிருந்த பரிசேயர் நினைவிற் கொண்டனர், அவர் உயிர்த்தெழுந்துவிடுவார் அல்லது உயிர்த்தெழுந்துவிட்டார் என்று சீடர்கள் கூறுவர் என்று பாதுகாப்பாக இருந்தனர். பிலாத்து இயேசுவின் உடலைப் பாதுகாக்க நான்கு வீரர்களைக் கொடுத்தான் உரோமப் படைகள் கட்டுக்கோப்பு நிறைந்தவை மூன்று மணிக்கு ஒரு தடவை கடமைமாறும் அமைப்புக் கொண்டவை. உயிர்த்தெழுந்த இயேசுவை அவருடைய அடியார்கள் கண்டனர். உரோம வீரரோ தாம் நித்திரையாக இருக்கையில் சீடர்கள் உடலைத் தூக்கிச் சென்றனர் என்றனர். நித்திரையின்போது சீடர்களை அவர்கள் கண்டனரா? தளபதிகளுக்குப் பயந்து இப்படிக் கூறினரா?

இயேசுவின் சீடர்கள் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களையும் பெற்றனர் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீடராக்கிப் பிதாகுமாரன் பரிசுத்தாவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்கும்படி கூறப்பட்டனர். கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையை அவர்கள் ஆரம்பித்தனர். இயேசு எப்பொழுதும் நம்மோடு இருப்பதற்காக நம்மைப் பிரிந்து செல்ல வேண்டியதாயிற்று

பேதுருவின் வாழ்க்கையில் திருப்பமேற்படுகின்றது. மூன்று முறை மறுதலித்தவனை அலங்கார வாசலண்டையில் மீண்டும் காண்கிறோம். சப்பாணிக்கு அவர் உரைத்த வாசகம் துணிவு நிறைந்தது. 'நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட' என்று கட்டளையிடுகின்றான்.

சீடர்கள் எல்லாரும் புதியவராயினர். அவர்களுக்குள் வல்லமை புகுந்தது உயிர்த்தெழுந்த இயேசுவை அவர்கள் கண்டு கொண்டனர். இதுவே அவர்கள் துணிவுக்குக் காரணம். இரத்தச் சாட்சிகளாக மரிக்க துணிவு பெறுகின்றனர்.

உயிர்த்தெழுந்த ஆண்டவர் நமது சோகம், நம்பிக்கை வரட்சி பயம் யாவற்றையும் போக்குவார். வல்லமை நிறைந்த வாழ்க்கையைத் தருவார்.

---

### சிறந்த படம் "பசி"

1979-ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படங்களில் "பசி" என்ற படத்திற்கு தேசிய திரைப்பட விருது வழங்கப்பட்டுள்ளது,

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வித்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அடுத்த கல்வியாண்டின் ஆரம்பத்தில் (செப்டம்பர் 1980) கல்வித்துறை ஆரம்பிக்கப்படும். Dp-in-Ed. படிப்புகள் B. Ed. படிப்புகள் இனித் தமிழ்மொழி மூலம் இங்கு போதிக்கப்படும் எனத் தெரிகிறது.

### மக்கள் வங்கிக் கிளைகள் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்முறைகளையடுத்து மூடப்பட்ட மக்கள் வங்கிக் கிளைகள் இம்மாதம் மீண்டும் திறக்கப்பட விருக்கின்றன.

### யாழ்ப்பாணத்தில் மழை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த மூன்று மாதங்களாக நிலவிய கடும் வரட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தாற்போல இந்த வாரம் பல ஊர்களில் நல்ல மழை பெய்திருக்கின்றது. எனினும் வெப்பம் கூடுதலாகவே இருக்கின்றது.

## சுவிசேட பிரபல்ய இயக்கத்தின் தோற்றமும் மலர்ச்சியும்

(முற்றொடர்ச்சி)

### CLAPHAM SECT

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் சமுதாயத்தில் செல்வாக்கும், பொருளாதாரத்தில் உயர்வும் அரசியலில் ஈடுபாடும் கொண்ட ஆங்கிலேய திருச்சபை அங்கத்தினர் வட்டமொன்றே Clapham Sect என அழைக்கப்பட்டது. இவ்வட்டத்தினரில் பெரும்பாலானவர்கள் Clapham என்ற இடத்தில் வசித்தமையினாலும், ஆங்குள்ள தேவாலயத்தில் வழிபாடு செய்தமையினாலும், Sydney Smith (1764 — 1840) என்பவர் இவர்களை Clapham குழுவினர் என அழைத்தனர். அப்பெயர் தொடர்ந்து பலராலும் வழங்கப்படலாயிற்று. ஆரம்பத்தில் இக்குழுவில் அங்கத்தவர்களாகவிருந்தவர்கள் J. Venn, Charles Grant. Z. Macaulay. Lord Teigmmonth, James Stephen, Hentry Thoruton, Granville Sharp, William Wilberforce முதலியவர்களாவர் சமுதாய ஏணியில் மேல் மட்டத்தில் நின்ற இச்சீமான்கள் சமுதாய மாற்றத்தில் பிற்போக்கான கொள்கைகளைக் கொண்டிருந்தனரெனினும் அற விதிகளுக்கும், நல்லொழுக்கத்திற்கும் கண்மூடிகளாக இருக்கவில்லை. இந்த நல்நோக்கத்தினால், இச்செல்வந்தர்கள் சீரழிந்தும் சிறுமைப்பட்டுமிருந்த தொழிலாளி வர்க்கத்தினைக் கருணையுள்ளத்துடன் நோக்கினர். அடிமை வியாபாரத்தை முற்றாக நீக்கல். இந்தியாவுக்கு நற்செய்தித் தொண்டர்களை அனுப்புதல், பிரித்தானிய வெளிநாட்டு வேதாகமச் சங்கத்தினையமைத்தல், சீராலியோன் என்ற நாட்டில் மாதிரிக் குடியேற்றத் திட்டத்தினையமைத்தல், இங்கிலாந்தில் Proclamation Society எனும் தார்மீக புனருத்தாரண இயக்கத்தினை உருவாக்கல், ஏழைத் தொழிலாளிகளின் வசதிகளைப் பெருக்கல் போன்ற அரிய முயற்சிகளெல்லாம் முன்னின்று உழைத்தனர். 1794-ல் ஓய்வுநாட் பாடசாலைகளைப் பல இடங்களிலும் பரப்புவதற்கு முன்னின்று உழைத்தனர். இக் கூட்டத்தினர், திருமணங்களினால் ஒருவரோடொருவர் உறவு கொண்டிருந்தமையினாலும், செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தமையினாலும், சமுதாயத்தில் மிகச் சிறுபான்மையினராக விருந்த போதும் அரசாங்கத்திற்கூடாகவும், வெளிநடவடிக்கைகள் மூலமாகவும் பல சாதனைகளைப் புரிந்தனர்.

### William Wilberforee (1759 — 1833)

Clapham வட்டத்தைச் சேர்ந்த இப்பெரியார், தமது செல்வம், கவர்ச்சி, பாராளுமன்ற விவாதிக்கும் திறன், பிரதமர் இளைய பிற்றுடன் கொண்டிருந்த நட்பு போன்ற யாவற்றையும் அடிமை வியாபாரம் என்னும் கொடுமையை விரட்ட அர்ப்பணித்தவராவர். Hall என்ற நகரில் தோன்றிய விலபாபோஸ் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த செ. ஜோன்ஸ் கல்லூரியில் கற்றவர் 1780-ல் Hall இன் பாராளுமன்ற உறுப்பினராகவும் பின்னர் YorkShire இன் பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டு பாராளுமன்றத்தில் கீர்த்தி மிக்க பேச்சாளராக விளங்கினார். 1784-ம், 85-ம் ஆண்டுகளில் ஐரோப்பாக் கண்டத்தின் பல நாடுகளுக்கும் விஜயம் செய்தார். புதிய ஏற்பாட்டினைப் படித்தமையினால் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருக்கு ஊழியம் செய்வதனையே கருத்தாகக் கொண்டனர். ஆனால், John Newton என்னும் நண்பரின் தூண்டுதலினாலே குருவாகச் சேராது பாராளுமன்றத்திற்கூடாக இறைவனுக்குத் தொண்டாற்ற விளைந்தனர். இவர் 1787-ல் ஒழுக்கத்தினைச் சீர்ப்படுத்துவதற்கான சங்கம் என்ற அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தினர். இதே சமயத்தில் T. Clarkson என்பவரின் நட்பினால் அடிமை வியாபாரத்தின் கொடுமைகளைப்பற்றிச் சிந்திக்கலாயினர். பாராளுமன்றத்திற்கூடாக அச்சீர்கேட்டைக் களைந்தெறிய திடசங்கற்பம் பூண்டனர்.

வில்பர்போஸ் 1797-ல் Clapham சென்று குடியேறினர். அதனைத் தொடர்ந்து அந்த வட்டத்தின் மிக முக்கியமானவொரு அங்கத்தவராயினர். "The Practical View of the Prevaiting Religious Systam of Pofessid Christans" என்ற நூலை அதே வருடத்தில் யாத்தனர். இந்த நூலில் கிறிஸ்தவர்கள் மனந்திரும்புதலையும் பாவத்தினின்றும் விலகுதலையும் மிகவும் கருத்தாகக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினர். இதனால் இவருடைய செல்வாக்கு பன்மடங்கு உயர்ந்தது. எவாஞ்சலிக்கல் சிந்தனையாளன் தனிநாயகனாகக் கருதப்பட்டனர். அன்னா மோரா அம்மையார் ஆரம்பித்த அறக்கட்டளைகளுக்கெல்லாம் வாரிவழங்கினர், 1798-ல் C. M. S. உதயமாவதற்கும் 1803-ல் வேதாகம சங்கம் தோன்றுவதற்கும் ஆதரவு நல்கினர். ஆனால், இறுதிவரை இவருடைய தலையாய போராட்டமாக விளங்கியது அடிமை வியாபார ஒழிப்பேயாகும். இவரது நன்முயற்சியால் இவ்வியாபாரம் 1807-ல் தடைசெய்யப்பட்டது. 1833-ல் அடிமை முறை முற்றாக நீக்கப்பட்டது. இவர் எவாஞ்சலிக்கல் கிறிஸ்தவராக விருந்தபோதும் விரிந்த மனப்பான்மையுடையவராக விளங்கினர், 1813-ல் கத்தோலிக்க மதத்தினருக்குப் பூரண உரிமை வழங்கும் திட்டத்திற்குப் பாராளுமன்றத்தில் ஆதரவு நல்கியமையே இதற்குச் சான்றாகும்.

---

### நூறு லட்சம் சேமிப்பு

கடந்த ஐந்து மாத காலத்தில் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் மட்டும் நூறு இலட்சம் ரூபாய் பொதுமக்களால் சேமிப்பில் இடப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மகாணங்களில் இந்தக் கிளையிலேயே மிகக் கூடுதலான தொகை சேகரிக்கப்பட்டுள்ளது.

### அன்னை திரேசாவுக்கு விருது

நோபல் பரிசு பெற்ற அன்னை திரேசாவுக்கு இந்திய அரசாங்கத்தின் அதி சிறந்த விருதாகிய பாரத ரத்ன பட்டம் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மாளிகையில் இவற்றினை ஜனாதிபதி சஞ்சீவி ரெட்டி வழங்கினார்.

### மெதடிஸ்த பாடசாலை வெற்றி

கல்வித் திணைக்களம் "மனிதப் போஷாக்கு" பற்றி நடாத்திய பேச்சுப் போட்டியில் பருத்தித்துறை வட்டாரத்தில் மெதஸ்டிஸ்த பாடசாலை முதல் இரு இடங்களையும் பெற்றது. செல்வி என். ஷாமினி முதலாவது இடத்தையும் செல்வி கே. மணிமேகலை இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

## வாலிபர் கூட்டம்

மானிப்பாய்த் திருச்சபை வாலிபருக்கும், தெல்லிப்பழை திருச்சபை வாலிபருக்கும் இடையில் ஒரு ஒன்றிணைந்த கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை (9-3-80) மானிப்பாய் திருச்சபை மன்றத்தில் காலை 9-30 மணியளவில் ஆரம்பமாகியது. மானிப்பாய் வாலிபர் சங்கத்தின் தலைவரான S. வின்சன் ஜெயக்குமாரின் தலைமையில் காலை ஆராதனை ஆரம்பமாகியது. இதன்பின் திருமதி R. தம்பியப்பா அவர்களினால் யோசுவாவைப் பற்றி வேதப் படிப்பு நடத்தப்பட்டது. இதன்பின் சில களிப்பூட்டும் விளையாட்டுக்கள் இடம்பெற்றன. திரு: M. R. தர்மசிலன் அவர்கள் சிறு சொற்பொழிவு நிகழ்த்தினார். அவர் சீன தேசத்தைப் பற்றியும், அவர்களின் நடத்தைகளைப்பற்றியும். உணவு, உடை போன்றவற்றைப் பற்றியும் கூறினார். அதன்பின் திரு. தம்பியப்பா அவர்களினால் "சபையின் முன்னேற்றத்திற்கு வாலிபரின் பங்கு" எப்படி அமைய வேண்டும் என்று ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. தெல்லிப்பழை வாலிபர் சங்கத்தின் தலைவர் செல்வன் S. அசோகனின் தலைமையில் முடிவு ஆராதனை நடைபெற்றது. கனம் சாம் தம்பு அவர்களின் ஜெபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் கூட்டம் முடிவுற்றது; இக்கூட்டம் முழுநாள் கூட்டமாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## பொன்னாலையில் உப தபால் நிலையம்

பொன்னாலையில் உப தபால் நிலையம் ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது. இதற்கான பூர்வாங்க வேலைகளைத் தபால் தந்தி தொடர்புகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

## மட்டக்கிளப்பு வை. எம். சி. ஏ.

மட்டக்கிளப்பு வை. எம். சி. ஏ. வாலிபர் நரிப்புலித்தோட்டம் என்ற கிராமத்தினை விஸ்தரிப்புச் செய்கின்றனர். இக்கிராமத்தில் தலைமைச் செயலக உதவியுடன் வறிய குடும்பங்களுக்கு ஐம்பது வீடுகளைக் கட்ட இவர்கள் திட்டமிட்டு வருகின்றனர்.

## அடையாள அட்டை

இதுவரை அடையாள அட்டை பெறுநவர்கள் ஏப்ரில் மாதம் 7-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். 18 வயதிற்கு மேற்பட்ட யாவரும் அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டுமென்றும் அதற்கான விண்ணப்பப்படிவங்களை தமது பிரிவு கிராம சேவகரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் இனி குழாய்க்கிணறுகள்!

குழாய்க்கிணறுகள் அமைக்கும் திட்டம் யாழ்ப்பாணத்தில் வெற்றியளித்துள்ளது. உடுப்பிட்டியில் முதன்முதலாக அமைக்கப்பட்ட குழாய்க்கிணறு பெருவெற்றியாக அமைந்தது. இக்குழாய்க் கிணறு மூலம் நாளொன்றுக்கு 5000 கலன் நன்னீர் பெற்றுக்கொள்ள முடிகின்றதாம். இனி யாழ்ப்பாணத்தில் நீர்வளச் சபை இத்திட்டத்தினைப் பரவலாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை

திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல

மற்றும்

பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,

தபால்பெட்டி இல: 92

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!!


## உபவாசம்

(முற்றொடர்ச்சி)

### ஆராதனையை அலட்சியமாய் ஆதரிப்பது

இன்னும் சிலர் தெய்வ ஆராதனையை அலட்சியமாய் எண்ணி தெய்வ பயத்தோடல்லாது தங்களைத் தாங்களே மேன்மையாய் எண்ணி ரோமர் 12 அதி. 3-ல் சொல்லியபடி கிறிஸ்தவ ஆராதனை அல்லது ஜெபிக்கும்போது முழங்காலில் நிற்க விரும்புகிறார்களில்லை. முழங்கால் யாவும் முடங்கும் எனத் தேவ வசனஞ் சொல்லியிருக்க, இவர்கள் தேவ வசனத்திக்கு விரோதமாக ஜபிக்கவும், ஆராதனைகளில் விரும்பப்படாத கேளிக்கை, களியாட்டங்களுஞ் செய்து வருகிறார்கள், எ. சா. 1, 12—19 வரை சொல்லியபடி தேவனுக்கு அருவருப்பானவைகளைத் தற்பிரியமாய்ச் செய்து ஜெபிக்கிறவர்களைக் குறித்து எச்சரித்திருக்கிறது. இப்பேர்ப்பட்ட அசட்டையான ஜெபம், ஆராதனையில் பங்கு பெறுவது நம்மிடமுண்டானால் அவைகளையும் தேவனுக்காக நீக்கிவிட வேண்டும். ரோமர் 10 அதி 13இல் சொல்லியபடி கர்த்தருடைய நாமத்தை (தெய்வ பயத்தோடே) தொழுதுகொள்கிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் அது மாத்திரமல்ல மீகா 7; 19இல் சொல்லியபடி நமது பாவங்கள் சமுத்திர ஆழங்களிலபோட்டு விடுவார்.

உபவாச காலங்களில் நாம் செய்ய வேண்டிய முக்யமானவை எவை.

ஏசா 58;5—11 வரை யோவேல் 2 அதி 14 வ (கவனமாய் வாசிக்கவும்) நாம் ஊக்கமாய் ஜபித்து பின் வசனத்தில் சொல்லியவைகளை நாம் உண்மையுள்ள விசுவாசத்தோடு செய்யும் பொழுது மெய்யாகவே கர்த்தர் தம ஜனத்தை ஆசீர்வதிடபேனென்கிறார்.

## நூதனசாலை இடமாற்றத்திற்கு ஆட்சேபம்

இதுவரை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இயங்கி வந்த நூதனசாலை (Museum) நாவலர் வீதிக்கு மாற்றம் செய்யப்படுவதனை சிலர் எதிர்த்து வருகின்றனர். பகிரங்கமான இடத்திலிருந்து ஒதுக்குப் புறமான இடத்திற்கு மாற்றம் செய்யப்படுவது அதன் பார்வையாளருக்கு அசௌகரியமாக விருக்கும் என்று அபிப்பிராயப்படுகின்றனர்.

## இந்தவாரம் சொன்னார்கள்

* மண்ணின் மைந்தர்கள் (Sons of ths Soil) என்ற தத்துவம் மிகவும் பிழையானது மட்டுமல்ல. தீமையானதுங் கூட.

— திருமதி இந்திரா காந்தி

* சீதனக் கொடுமை அழிந்தாலேயே தமிழினத்திற்கு விமோசனம் உண்டு.

— திரு. அ. அமிர்தலிங்கம்

* இந்த அரசு ஆட்சி செலுத்த ஆரம்பிக்கு முன்னரே நாம் மரண ஓலை எழுதி வைத்துவிட்டோம்.

— திரு. வாசுதேவ நாணயக்கார

* தமிழ்த்தலைவர்கள் தமிழ் ஈழம் கிடைக்காவிட்டால் எம். பி. பதவிகளைத் துறந்து பாராளுமன்றத்தை விட்டு வெளியேற வேண்டும்.

— வண. பிதா சிங்கராயர்

* தமிழனுக்கென ஒரு நாடு இல்லாதபோது செல்வா தினம உலகெல்லாம் கொண்டாடப்படுகிறது.

— மேயர் இராசா விசுவநாதன்

* இப்பாவே ரொடீசியா போன்று இங்கும் நடக்குமென இளைஞர்கள் தலைவர்களைப் பயமுறுத்தக்கூடாது.

— திரு. எம். சிவசிதம்பரம்

* தமிழரின் பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறார்கள் என்பதில் தான் இடதுசாரிகளின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

— திரு. குமார் டேவிட்

* மகாவலித்திட்ட வெற்றியிலே தான் நாட்டின அபிவிருத்தி தங்கியுள்ளது.

— மகாவலித் திட்ட முகாமையாளர் குணவர்த்தன

* இந்த தசாப்த இறுதியில் சீனு ஜப்பான் ஆகியவற்றிற்கு எதிராக ரஷ்யா குறுகிய காலப் போரில் குதிக்கும்.

— பிரிட்டிஷ் சோதிடர் குழு

* மட்டக்களப்பு பல்கலைக் கழக நிர்வாகக் குழுவில் முஸ்லீம்களுக்கும் போதுய பிரதிநிதித்துவம கிடைக்க வேண்டும்.

— மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. தலைமையில் முஸ்லிம் குழு

* கல்விக் கொள்கை மாற்றத்தால் இளஞ்சந்ததியினர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

— திரு. த. இராஜலிங்கம் M. P.

நாடக விமர்சனம்

## கண்கள் திறக்கின்றன அப்பாவுக்கு அஞ்சலி

சென்னை C. L. S. செயலாளர் கலாநிதி தயானந்தன் பிரான்சிஸ் எழுதிய இரு நாடகங்கள் நமது அத்தியட்சாதீன வாலிபர் பேரவையினர் மார்ச் மாதம் 28-ம் 29-ம் திகதிகளில் அரங்கேற்றினர். "கண்கள் திறக்கின்றன" தபசு கால சிந்தனைக்குரியது. உயிர்த்தெழுந்த ஆண்டவர், அவரை எதிர்த்தவர்களைத் தமது அன்பினால் ஒவ்வொருவராகத் தமது அடியாராக்குகின்றார். பார்த்திமேயு, பாருக், பர்னபா, மல்குஸ், சவுல் இறுதியில் கொடியவன் காய்பா இயேசுவின் அரவணைப்புக்குள் வந்துவிடுகின்றனர். இந்த நாடகம் அப்பாவுக்கு அஞ்சலியை விடப் பல வழிகளில் சிறந்து விளங்கியது, மல்குஸாக நடித்த P. N. ஜெயசீலன் எல்லாரையும் விடச் சிறந்துவிளங்கினார். நாடகத்தின் பெருவெற்றிக்கு அவருடைய உணர்ச்சி மிக்க நடிப்பே காரணமாக அமைந்தது. வில்லன் பாத்திரத்தில் சோபிக்கும் மோகனராஜ் இந்த நாடகத்திலும் காய்பாவாக நடித்தார். தமது பாத்திரத்தின் இயல்பினை உணர்ந்து நடித்திருக்கிறார். இயேசுவாக நடித்த ஆனந்தன் ஆனல்டின் பேச்சில் தெளிவும் இனிமையும் இருக்கிறது. கிறிஸ்தவ நாடக உலகம் அவரைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், மற்றும் பேதுருவாக நடித்த J. N. ஜெயச்சந்திரன யோவானாக நடித்த M. A. ஜோன்சன், ஆகியோரும் சிறப்பாக நடித்தனர்.

"அப்பாவுக்கு அஞ்சலி" ஒரு வைத்தியக் குடும்பத்தின் கதையைக் கூறுவது. தந்தை டொக்டர் அடைக்கலம் மேற்படிப்பையும் புகழையும் செல்வத்தையும் விரும்பாது தமது சொந்தக் கிராமத்தில் ஊழியம் செய்கிறார். மகன் டொக்டர் அருள் மேற்படிப்பு புகழ், பணம் என்று ஆசைப்படுகிறான். தந்தையின் மரணம் அவன் உள்ளத்தை மாற்றுகிறது. கிராமத்தில் வைத்திய சேவை செய்யத் தீர்மானித்துவிடுகின்றான். இந்த நாடகத்தில் டொக்டர் அருளின் மனைவியாக நடித்த K. ஆனந்தி தமது இயல்பான நடிப்பால் எல்லாரினதும் பாராட்டைப் பெற்றார். சகாயமாக நடித்த K. R. இரஞ்சித்குமார், அதிசயமாக நடித்த A. தயாகரன் ஆகியோரும் பாராட்டிற்குரியவர்கள். டொக்டர் அருளாக G. தேவகுமாரும் டொக்டர் அடைக்கலமாக யோகானந்தனும் நடித்தனர். அவர்கள் நடிப்பில் உணர்ச்சியைக் காணமுடியவில்லை. இந்த நாடகத்தில் கிறிப்பு நடிகராக வண. எஸ். மனோபவன் தோன்றிச் சபையாரைப் பரவசமாக்கினர்.

அத்தியட்சாதீன சங்கத்தின் வாலிபர் பேரவையினரின் முயற்சி பாராட்டப்படவேண்டியது. பல திருச்சபைகளைச் சேர்ந்த வாலிபர்களை ஒன்று சேர்த்து. அன்போடும் ஆர்வத்தோடும நாடகங்களைப் பழக்கி அரங்கேற்றியமை அவர்களின் ஊக்கத்திற்குச் சான்று. நாடக விழாவின் வெற்றி மேலும் பல நற்பணிகளுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்கவேண்டும். வாலிபர் பேரவையின் மும்மூர்த்திகளான து. சத்தியநாதன். அ. ஜெயராஜன், P. N. ஜெயசீலன் ஆகியோர் தொடர்ந்து கிறிஸ்தவ நாடக உலகினை வளர்த்துவருவார்கள் என நம்புகிறோம்.

— S. J.

*EDITORIAL*

## The Cross outside the Church

"The Cross *in* the Church derives its meaning and message from the Cross *outside* the Church for Christ was crucified outside the gates of the city of Jerusalem."

These words are taken from a Sermon reported to have been preached at the Chapel of the Tamilnadu Theological Seminary at Arasaradi, Madurai by a Hindu Brahmin Lady who was on the staff of the Seminary for over a year as an English Teacher.

The late K. C. S. Panikker, an outstanding Indian Painter also a Hindu, who encountered Christianity while he was a student at the Madras Christian College in his sculpture *Sorrow of Christ* portrays the distorted face of Christ with the decayed nose, the rotten mouth, and the pop eyes which are typical symptoms of leprosy. Panikker wanted to express Christ's face which participates in the pain of the leper. "Asian art," according to him, "must radiate Asian sensibility."

Meditating, fasting, living in austerity are all useful exercises which we have in common with other religions in Asia. But the Christian Faith goes one step further in involving itself in the physical agony of our brothers in travail.

*Good News* is very much in the news today with *Melbourne*, the World Conference on Mission and Evangelism due to meet from May 12 — 25 this year.

But *Good News* if it is to have meaning for our time should transform the lives of those who suffer oppression and poverty. Don Helder Camara, a modern writer, has focussed the crucial struggle of our time in these words:—

> The first step is to turn the *mass* into a *people* and then to turn the people into a people of God. I find no use in sending to heaven men that starve or have their limbs crushed by torture. I would rather have them live *as men* so that their eternal life can also be *plenitude for them*.
>
> (The Italics are ours.)

A fundamental disrespect for human life and dignity is foremost among the areas of struggle where the Christian has to carry the cross 'outside the Church'.

Monsignor Oscar Romero, the 63 year old Archbishop of Salvador, a Nobel Prize Nominee last year (who was buried last Sunday in a crypt inside the Cathedral) is the latest victim in the struggle of the Church to defend human rights by appealing to the developed countries to prohibit the giving of military aid to oppressive governments.

The Salvadoran Prelate had said in his letter to President Carter (a letter which was released by Carter's rival for Presidential Nomination, Senator Edward Kenneddy) that US military aid would "sharpen the injustice and repression" against the organisations of the people who repeatedly have been struggling to gain respect for their most fundamental human rights.

A lack of concern for the worth of human life is not the only "cross" outside the Church which a Christian has to bear. There are 660,000 Koreans in Japan today, 80 per cent of them second and third generation Koreans. But they are discriminated against in education, housing, marriage, pensions, welfare benefits etc. The Koreans, at the turn of the century, were a source of cheap unskilled labour in Japan and have contributed significantly to the rapid face of industrialisation in the country.

The witness of the Korean Church today, in the context of discrimination and alienation, is a pointer to the need of the Christian Church to make the gospel of Christ transform death into life and despair into hope in their relevant human rights struggles outside the Church.

As Paul Lehman puts it: *The gospel is the politics of God to make and keep human life, human.* Christ, the Son of Man, suffers in each indignity offered "to the least of his brethren". C. F. Andrews saw the suffering Christ in an Indian labourer in Natal. Mother Teresa sees today the suffering Christ in "the poorest of the poor" in the slums of Calcutta. For Pastor Niemoeller and Dietrich Bonhoeffer of the Confession Church of Germany, "the Cross outside the Church" meant a trancendent power to resist the totalitarian regime of Hitler.

Benjamin William, a Graduate of Prinsceton Theological Seminary provides an inspiring thought for us as we celebrate Easter this year. His lines reflect the ultimate 'hope' of the Christian who has taken on the cross in his struggles 'outside the Church'.

> The Cross of Christ lies empty
> With the hollow hearts and word
> And faith of those once faithful
> Who had their hopes interred.
>
> But stealing in with morning
> New hope fills fresh as dew
> The Cross of Christ lies empty
> But the tomb is empty too.

## THE WAY OF THE CROSS

We are now in the Holy Week. Ash Wednesday was 20th February; the following forty days, we have a Period for special study, meditation, self-examination and prayer, in the atmosphere of the Crucifixion of the Lord Jesus Christ.

The Holy Bible says that before the Lord began His Public Ministry, He spent forty days in fasting and prayer, in the wilderness. At the end of this period, Satan tempted Him, to change the plans He had made for the establishment of His Kingdom of Love. But, He refuseed to use the Powers He possessed, in the way Satan commanded, — as seen in the three temptations, recorded in St. Mathew 4 : 3 — 10. He would take the Way of the Cross, and no other.

Now, what is the Way of the Cross? The story of the Crucifixion of our Lord is one of the saddest stories in Human History, looked at from the human side. Crucifixion itself is bad enough, but in our Lord's case, it is coupled with striking Him in the face, spitting on Him, mocking Him, ill-treating in inhuman ways, difficult to believe. All these were done after Pilate the Judge had acquitted him and said, "I find no fault in this man", St. Luke 23 : 4, 14.

(1) The Way of the Cross is God's way of dealing with man's sin and all forms of evil. The Lord said, that He came "to give His life, a ransom for many", St. Mark 10 : 45. "*Life through death*" *is God's way.* In our own experiences now, we know how His death on the Cross and its sufferings, help us, to forget our own gain, for the welfare of others, and follow Him.

(2) The Cross shows the way man should take for any good cause to be successful. Man should be self-less, and lose himself in the Cause for which he worked, should it prove a success. It is certain to fail, when self-gain came in. The Cross is a good illustration, showing to the world, the importance of self-sacrifice in man's life and work. There should be honest self-denial.

(3) Life is not a heavy load to carry, but a noble Mission. God has a Purpose, for every person, and life's fulfilment is carrying out God's Purpose, at any cost. Making sacrifices for a good cause is itself a source of great blessing to man. The Greek word 'to sacrifice' means, 'to make sacred'. This is what the Lord did with His life. His life is sacred, because of the sacrifices He made, and in the end sacrificing His life. His Incarnation itself was a great sacrifice. God, the great Creator of the whole Universe, and reigned over it, as the King of Kings and the Lord of Lords, came down, took the form of a poor human being, and suffered like a bad criminal.

The Cross speaks to the world all the time, that man should look upon his life as a Mission, with a noble purpose; and man's success in life depends on the sacrifices he was prepared to make for it, with no thought of self. This is fully revealed in the life and death on the Cross of our Lord, and this is the Way of the Cross for men to walk in.

Here, we have the right way for Homes to be happy and prosperous; and also the way for Nations to develop along right lines, and to be truly peaceful, happy and prosperous.

**Rev. Dr. James S. Mather**

## "HE LIVES! HE LIVES!"

1. I serve a risen saviour, He's in the world today;
   I know that He is living whatever men may say
   I see His hand of mercy, I hear His voice of cheer,
   And just the time I need Him He's always near.

   He lives, He lives, Christ Jesus lives today.
   He walks with me and talks with me along life's narrow way.
   He lives, He lives, salvation to impart
   You ask me how I know He lives? He lives within my heart.

2. In all the world around me I see His loving care,
   And tho' my heart grows weary I never will despair
   I know that He is leading thro' all the stormy blast,
   The day of His appearing will come at last.

3. Rejoice, rejoice, O christian, lift up your voice and sing
   Eternal hallelujahs to Jesus Christ the King
   The hope of all who seek him, the help of all who find,
   None other is so loving, so good and kind.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB/8920/78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 4th April, 1980.